# நிழலிரவு –நாவலில் கிறித்தவ வாழ்வியல்

*மா. அய்யனுராஜ்*
முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர்
தூய சவேரியார் தன்னாட்சி கல்லூரி
பாளையங்கோட்டை

***முன்னுரை***
*தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த கிறித்தவரான தமயந்தி தன்னுடைய நாவலான நிழலிரவில் இறையியல் சிந்தனையோடு ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை இந்நாவலில் படைத்துள்ளார்.*

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6401

## கிறித்தவர்கள்

உயர்சாதிக் கிறித்தவர்கள், ஒடுக்கப்பட்ட கிறித்தவர்கள் என்ற வேறுபாடு கிறித்தவர்களிடம் காணப்படுகிறது. சமுதாயத்தில் உயர்ந்த சாதியைச் சார்ந்தவர்களும், பொருளாதாரத்திலும், ஆதிக்கத்திலும் செல்வாக்கு உடையவர்களான பிள்ளைமார், பிராமணர், முதலியார் போன்றோர் உயர் சாதிக்கிறித்தவர்கள் ஆவர்.சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள், அதாவது, பொருளாதார நிலையிலும், சாதியிலும் குறைந்தவர்கள் ஒடுக்கப்பட்ட கிறித்தவர்கள். தீண்டாமைக் கொடுமை காரணமாக இந்து மதத்தில் இருந்து கிறித்தவ மதத்திற்கு மாறினர். மதம் மாறினாலும் கிறித்தவ சமயத்திலும் தாழ்ந்த சாதியினராக ஒடுக்கப்படுகின்றனர். இந்த ஒடுக்கப்பட்ட கிறித்தவர்களின் வாழ்வு முறையானது உயர்சாதிக் கிறித்தவர்களின் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலே உள்ளது. சமுதாயத்தில் நிலங்கள் உடையவர்களாகவும், செல்வாக்கு பெற்றவகளாகவும் உயர்சாதியினர் காணப்படுவதால் ஒடுக்கப்பட்ட மக்கள் இவர்களைச் சார்ந்தே வாழ வேண்டிய சுழல் காணப்படுகிறது.

## தீண்டாமைக் கொடுமை

ஒடுக்கப்பட்ட கிறித்தவர்கள் உயர் சாதிக்கிறித்தவர்களால் தீண்டாமைக் கொடுமைக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்கள் திருச்சபைகளில் தீண்டாமைக்கு ஆளாயினர். தீண்டாமை என்பது ஒடுக்கப்பட்டவரிடமிருந்து உயர்சாதியினர் தங்களைத் தாங்களே ஒதுக்கிக் கொள்ளுதல், ஒடுக்கப்பட்டவர்களை ஒதுக்கி வைத்தல் என்ற வடிவங்களில் உள்ளது.

“தமிழகத்தில் கிறித்தவர்களாக மாறிய ஆதிக்கச் சாதியினர் தங்களுடன் தீண்டாமை என்ற செடியையும் கிறித்தவத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.இன்று அந்த நச்சுச் செடியானது கிறித்தவத்தில் நன்கு வேரூன்றி விட்டது”[1]

இந்தத் தீண்டாமையாகிய நச்சுச்செடி திருச்சபையின் பல்வேறு தளங்களில் ஆழமாக வேரூன்றி உள்ளது.

### கிறித்தவ மக்கள் கல்வி

“சமூகவளர்ச்சிக்குகல்விஅடிப்படையாக விளங்குகிறது. கல்வி மனித சமூகத்தை மேம்படுத்தும் கருவி. கல்வியினால் மட்டும் சமுதாயத்தைச் செப்பம் செய்ய இயலும்.”[2] என்பார் கோமதி சங்கர். அத்தகைய கல்வியானது பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் கூறும் சொல்லுக்கு மறுக்காமல் தலையசைக்கும் மாணவர்களை மட்டும் ஆசிரியருக்குப் பிடிக்கிறது. மாற்றுக்கருத்துகள் பேசியதற்காக ரத்தினகுமாரியை ஆசிரியருக்கு பிடிக்காமல் போகிறது. பல மாணவிகள் ஆசிரியர்களின் தீண்டல்களை இயல்பாக எடுத்துக் கொள்கின்றனர். ரத்தினகுமாரி இயல்பாக எடுத்துக் கொள்ளாததால் ஆங்கில ஆசிரியர் மதிப்பெண்களில் கைவைக்கிறார். ரத்தினகுமாரியோ அவள் குடும்பத்தைச் சார்ந்தவர்களோ மொட்டைக்கடிதம் எழுதியதாக ஏழாம்வகுப்பில் ஒருகுண்டு ஆசிரியை அவள் தொப்புளைச் சுற்றிக் கிள்ளி அழ வைக்கிறார். இதனால் பள்ளிக்கூடம் வெறுக்கத்தக்க கூடங்களாய் மாறுகிறது. இதனால் கல்விச்சாலைகள் கோவில் என்றும், ஆசிரியர்கள் தெய்வம் என்பதையும் ஏற்க மறுக்கிறாள்.

### ஆலயத்தின் ஊழியக்காரர்களின் ஆணவம்

“கிறித்தவ ஆதின நிர்வாகத்தில் சாத்தானிருக்கு'' என்று கூறிய ஐயரை உடனடியாக மாற்றம் செய்கிறார்கள். உட்கட்சிப் பிரட்சனைகள் போல ஒருவருக்கொருவர் கணக்குக் கேட்பதும் ஊர் முழுக்க நோட்டீஸ் ஒட்டுவதும் அதிகமாகிறது. தெற்குப் பஜாரில் ஒரு பெண்ணை அவளது மாமனார் கொன்றுவிடுகிறார். இதை எல்லாம் ரத்தினகுமாரி “கிறித்தவ உலகம் எதை நோக்கிப் போகிறது? கிறித்தவ ஆதின நிர்வாகம் எதை நோக்கிச் செல்கிறது? பெண்களுக்கு எங்கே நிம்மதி? ”என்று நோட்டீஸ் அடித்து ஞாயிற்றுக்கிழமை காலையில் கோவில் வாசலில் விநியோகிக்கிறாள். அங்கு கொடுத்ததைப் பார்த்த உபதேசியார் இங்க வச்சுக் கொடுக்க வேண்டாம், பிரச்சனை ஆனா எந்தலையில விடியும் என்று கூறுகிறார்.

### ஒடுக்கப்பட்ட மக்கள் மேல் சாதியவன் கொடுமை

ஒடுக்கப்பட்ட கிறித்தவ சாதிமக்களான சக்கிலியச் சாதி மக்கள் மேல் மேல்சாதிக் கிறித்தவர்கள் வன்கொடுமைகள் செய்கின்றனர். சக்கிலியச் சாதி மக்கள் அவர்கள் முன்னோர்கள் காலத்தில் இருந்து கிறித்தவ விசுவாசத்தில் இருக்கின்றனர். நூறு வருடத்திற்கு முன் ஆலயம் கட்ட இடத்தைக் கொடுத்து, கட்டட வேலையும் பார்த்துக் கொடுத்ததாக பெரியவர்கள் கூறுகின்றனர். கீழ்ச்சாதி மக்கள், மேல்ச்சாதி மக்கள் இருக்கும் வேளையில் ஆலயத்திற்குள் வந்தால் கொலை நடக்கும் என்று கூறுகின்றனர்.

ஊசிக்கோபுர ஆலயத்தில் பிள்ளைமார் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. மேல்ச்சாதி மக்கள் மட்டும் ஆலயத்தில் முன்வரிசையில் அமருகின்றனர். கீழ்ச்சாதி மக்கள் அமருவதற்கு வீட்டில் இருந்து நாற்காலி எடுத்து வருகின்றனர். இப்படியாக மேல்ச் சாதிக் கிறித்தவர்கள், கீழ்ச்சாதி மக்களிடம் சாதிய வன் கொடுமை செய்கின்றனர்.

### சங்கப் பிரச்சனை

டெபோரா காத்தரீன் ரத்னகுமாரியின் தந்தை ஆசிரியர் சங்கத்தில் இருக்கிறார். இதனால் ரத்னகுமாரியின் அம்மா ஒவ்வொரு ஆண்டும் கிறித்தவ அமைப்பு சார்ந்த பள்ளியால் மாற்றம் செய்யப்படுகிறாள். ரத்னகுமாரியும் மாற்றம் செய்யப்படுகிறாள். இதற்கு கிறித்தவ நிர்வாகம் காரணமாக இருக்கிறது. சங்கத்தலைவரான பவுல்ராஜ்

ராஜசேகர் கல்லூரியில் வேலைபார்க்கிறான். கல்லூரியில் வேலை பார்த்துக்கொண்டு சீட்டு நடத்துகிறான். சீட்டு நடத்துவதை எதிர்த்து நிர்வாகத்தால் ஒன்றும் செய்யமுடியவில்லை. சங்க அலுவலகத்தில் பணிபுரிபவர்கள் அனைவரின் வீட்டிற்கும் தொலைபேசிக் கட்டணம் சங்கப் பணத்துல தான் கட்டுகின்றனர். இப்படியாக சங்கப் பிரச்சனையை வெளிப்படுத்துகிறார்.

### சாதிப் பிரச்சனை

பழங்காலந்தொட்டே சாதி என்னும் அமைப்புமுறை இருந்து வருகிறது. “சாதி மனிதனின் நிறம், இடம்,இயற்கையமைப்பு முதலியவற்றைக் கொண்டு இந்தியாவிலுள்ள மக்களைப் பல பிரிவுகளாகப் பிரித்துள்ள நிறுவனம்”[3] என்று ஹட்டன் கூறுகிறார்.

திருநெல்வேலியில் இருக்கும் ஊசிக் கோபுர ஆலயத்தில் பிள்ளைமார் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. ஆலயத்தில் மேல்ச் ச ாதி மக்கள் மட்டும் முன்வரிசையில் உள்ள நாற்காலியில் அமருகின்றனர். கீழ்ச்சாதி மக்கள் அமருவதற்கு வீட்டில் இருந்து நாற்காலி கொண்டு வருகின்றனர். நாடார் சாதி மக்கள் இடைச்சாதியாக இருந்தாலும், கீழ்ச்சாதியோடு தான் சேர்கின்றனர். திருவாங்கூரில் பிராமண சாதியினர் பட்டினியாக இருந்தாலும் இடைச் சாதி, கீழ்ச்சாதி மக்கள் தொட்ட சாப்பாட்டை சாப்பிட மறுக்கின்றனர். இன்னும் சில இடங்களில் மேல்ச்சாதி வீட்டுப் பெண் சாப்பாடு தயார் என்று கூறியவுடன் மற்றைய சாதிமக்கள் ஏழு, எட்டு கிலோ மீட்டருக்கு தள்ளிப் போகின்றனர். மீண்டும் முதலாளியின் மனைவி வீட்டிற்குள் போனவுடன் மறைந்து நின்றவர்கள் வருகின்றனர். மறைந்து நின்றவர்கள் வருவதற்குள் சோற்றை ஒரு குழியில் காக்காவிற்குப் போடுகின்றனர். மனிதனை மனிதனாக நடத்தாமல் இருந்த இடங்களில் மெஷினரிங்க அதிக வேலை செய்கின்றனர். “ஐயர் சக்கிலியச்சாதி மக்களை ஆலயத்திற்குள் வரக்கூறுகிறார். மேல்ச்சாதிக் கிறித்தவர்கள் சக்கிலிய கிறித்தவன் பொணம் ஆலயத்திற்குள் வந்தாலும், தூம்பாவை தூக்கினாலும் பொணம் விழும் என்று மிரட்டுகின்றனர். ஆடு,மாடுகளை மந்திரிப்பதிலும், மேல் சாதிக் கிறித்தவர்களுக்கு மந்திரிச்ச பின்னர் கடைசியில் தான் சக்கிலியச் சாதி மக்ககளுக்கு மந்திரிக்கின்றனர். முதலில் மந்திரிக்கச் சொன்னால் அங்கு கலவரம் வருகிறது” இவ்வாறாக சாதிப்பிரச்சனையை ஆசிரியர் தன் நாவலில் வெளிப்படுத்துகிறார்.

### முடிவுரை

தென்னிந்தியக் கிறித்தவத் திருச்சபையை மையமாகக் கொண்ட இந்நாவல் கிறித்தவ மக்கள் வாழ்க்கையையும், கிறித்தவ நிர்வாகம் எடுக்கும் முடிவால் ஏற்படும் சீரழிவையும் ஆசிரியர் தன் நாவலில் படைத்துக் காட்டியுள்ளார்.

### அடிக்குறிப்பு

1. வல்லினம் (காலாண்டிதழ்) பக்-57
2. கே.எம்.கே. கோமதிசங்கர்,சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம் பக்-477
3. இரா.கல்பகம்,.சமூகவியல் பக்-83

### துணை நூற்பாட்டியல்

1. கோமதிசங்கர், கே.எம்.கே. சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், சரயு பப்ளிகேஷன்ஸ், மேலகரம், முதற்பதிப்பு அக்டோபர், 1989.
2. கல்பகம், இரா., சமூகவியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு-1973.